# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

முறையீட்டு மனு எண்: 0627/ஊராட்சி/2018

ஆணை எண்: 126/2018

நாள்: 22/05/2018

R. ரவிச்சந்திரன்,
2/76, நடுவீதி, அத்திப்பாளையம் (கிராமம்)
7, அக்ரஹார சாமக்குளம்,
சர்க்கார் சாமக்குளம் ஒன்றியம்,
கோயம்புத்தூர் – 641 110. – **முறையீட்டு மனுதாரர்**

வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும்
உதவி பொறியாளர்,
ஊராட்சி ஒன்றியம்,
சர்க்கார் சாமக்குளம் ஒன்றியம். – **எதிர் மனுதாரர்**

## ஆணை

கோயம்பத்தூர் மாவட்டம், அன்னூர் வட்டம், சர்க்கார் சாமக்குளம் ஒன்றியம் அத்திபாளையம் கிராமத்தில் வசிக்கும் திரு. R. ரவிச்சத்திரன் அவர்களுடைய 10.5.2018 நாளிட்ட மனுவில் அத்திப்பாளையம் கிராமத்தில் சாலை எண்.543ல் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான குளம் உள்ளது என்றும், இங்கு கிராவல் மண் நீண்ட காலமாக அத்திப்பாளையம் மணியக்காரருக்கும், தண்டல்காரருக்கும், ஊராட்சி மன்ற செயலாளருக்கும் தெரிந்து எடுக்கப்பட்டு வருகிறது. இது குறித்து புகார் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். "சர்க்கார் சாமக்குளம் ஒன்றியம் SCPAR திட்டம் 2016–2017ன் கீழ் கோபம்புத்தூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகாமை அவர்களின் வேலை உத்தரவின்றி துடியலூர் – கோவில்பாளையம் சாலை முதல் அண்ணா நகர் வரை சாலைப் பணி நடைபெற்று வருகிறது.

அச்சாலை பணிக்கு மட்டும் 40 யூனிட் மணல் மட்டும் தேவைப்பட்டு உபயோகப்படுத்திய நிலையில் 340 யூனிட் மணல் எடுக்கப்பட்டு, அதில் 300 யூனிட் மணலை தனியார் இடத்தில் வைத்து தனியாருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதற்கு பொறுப்பான வட்டார வளர்ச்சி அலுவலர், உதவி பொறியாளர், ஊராட்சி மன்ற செயலாளர், கிராம நிர்வாக அதிகாரி மற்றும் தண்டல்காரர் ஆகியோர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார்.

2. 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், கோயம்புத்தூர் மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் தொடர்பாக கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2018-ஆம் ஆண்டு மே திங்கள் 22-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

**செயலாளர்.**

பெறுநர்

R. ரவிச்சந்திரன்,
2/76, நடுவீதி, அத்திப்பாளையம் (கிராமம்)
7, அக்ரஹார சாமக்குளம்,
சர்க்கார் சாமக்குளம் ஒன்றியம்,
கோயம்புத்தூர் – 641 110.

நகல்

1. மாவட்ட ஆட்சித் தலைவர்,
   கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர். (இணைப்புகளுடன்)
2. நேர்முக உதவியாளர்
3. உதவி பிரிவு அலுவலர் (ஊராட்சி)